இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

ஞாயிற்றுக்கிழமை 25-06-2023

வள்ளலாரையுமா?

ஆளுநர் ஆர்.என்.இரவிக்குப் பதில் சொல்லவே எரிச்சலாக இருக்கிறது. எதையும் புரிந்துகொள்ளும் தன்மை கொண்டவராக அவர் இல்லை. தினமும் காலையில் செய்தித்தாளைத் திறந்தால் ஆளுநர் என்ன சொல்லி இருப்பாரோ என்ற எரிச்சல் பற்றிக் கொள்கிறது. அவருக்குச் சுத்தமாக, அடுத்தவர் சொல்வதை உள்வாங்கும் மனம் இல்லை.

தமிழ்நாட்டில் பல்லுடைக்கப்பட்ட சனாதனக் கும்பலின் அழுக்கு முகங்கள் எழுதித் தரும் கிழிந்துபோன பழைய வாய்ப்பாடுகளை - புதிய பொன்மொழிகளைப் போல தமிழ்நாட்டு மேடைகளில் ஆளுநர் சொல்வதைப் பார்த்தால் இன்னொரு பக்கம் பரிதாபமாகவும் இருக்கிறது. 'இவை எல்லாம் 100 ஆண்டுகளுக்கு முன் உடைக்கப்பட்ட பர்னிச்சரப்பா' என்று அவருக்கு யார் சொல்வது?

அருட்பிரகாச வள்ளலார் 200 ஆண்டுகளுக்கு முன்னால் ஆரியத்தைக் காவு வாங்கத் தொடங்கியவர். சமஸ்கிருதத்தை ' அனைத்து மொழிகளுக்கும் தாய் மொழி பாஷை' என்று சங்கராச்சாரியார் சொன்னபோது, 'அனைத்து மொழிகளுக்கும் தமிழ்தான் தந்தை மொழி' என்று சொன்னவர்தான் அருட்பிரகாச வள்ளலார்.

சட்டமன்றத் தேர்தலுக்கு முன்னதாக திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் வெளியிட்ட தேர்தல் அறிக்கையில் 419 ஆவது வாக்குறுதியாக 'வடலூரில் வள்ளலார் சர்வதேச மையம்' அமைக்கப்படும் என்று சொல்லி இருக்கிறோம். "சாதி சமய நல்லிணக்கத்தைப் பேணும் வகையில் அருட்பிரகாச வள்ளலாரின் சமரச சுத்த சன்மார்க்கப் போதனைகளைப் போற்றும் வகையில் இது அமையும்" என்று சொல்லப்பட்டு உள்ளது. இப்படி தி.மு.க. ஆதரிக்கும் ஒருவர், சனாதனத்தை ஆதரிப்பவராக இருந்திருக்க முடியாது என்பதாவது ஆளுநருக்குத் தெரிந்திருக்க வேண்டாமா?

'ஆறாம் திருமுறை' பாடல்களைத் தொகுத்து, 'இராமலிங்கர் பாடல் திரட்டு' என்ற நூலை 1940 ஆம் ஆண்டுகளிலேயே வெளியிட்டவர் தந்தை பெரியார் அவர்கள். வள்ளலார் நகரை உருவாக்கியவர் முதலமைச்சர் கலைஞர் அவர்கள். ஆட்சிக்கு வந்ததும் வள்ளலார் பிறந்த நாளை தனிப்பெரும் கருணை நாளாக அறிவித்தவர் திராவிட மாடல் ஆட்சியின் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள். இதன்பிறகாவது வள்ளலாரைப் பற்றி பார்த்துப் பேச வேண்டாமா ஆளுநர்?

வடலூர் போன ஆளுநர் என்ன பேசி இருக்கிறார் தெரியுமா? 'வள்ளலாரின் நூல்களைப் படித்தபோது அவை பிரமிப்பை ஏற்படுத்தின. 10 ஆயிரம் ஆண்டுகால சனாதன தர்மத்தின் உச்ச நட்சத்திரம் வள்ளலார்' என்று பேசி இருக்கிறார் ஆளுநர். வள்ளலாரின் எந்த நூலைப் படித்தார் என்று தெரியவில்லை. கோல்வால்கர் எழுதியதை வள்ளலார் என்று கொடுத்து விட்டார்களா எனத் தெரியவில்லை.

தொழில் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு அவர்கள் மிகத் தெளிவாக ஆளுநருக்குப் பதில் அளித்துள்ளார். "சமரச சுத்த சன்மார்க்க நெறிக்கும், சனாதனதர்மத்துக்கும்அடிப்படைவேற்றுமையைக்கூடஅறிந்துகொள்ளாமல் தர்ம ரட்சகராகப் புதிய அவதாரம் கொண்டிருக்கிறார்" என்று சொல்லி இருக்கிறார் தங்கம் தென்னரசு.

அதைவிட, "ஒன்றிய அரசின் 'தனிப்பெருங்கருணை' வாய்க்கப் பெற்றதாலேயே ஆளுநர் மாளிகையை சனாதனக் கூடாரமாக மாற்ற முயற்சிக்கிறார் ஆளுநர்" என்றும் கிண்டல் அடித்துள்ளார் அமைச்சர் தங்கம் தென்னரசு.

நியமனப் பதவியில் வந்தவர், கிண்டி மாளிகையை தனது விருப்பத்துக்குச் சிதைக்க முடியாது. வள்ளுவரிடம் தொடங்கிய ஆளுநர் ரவி, இப்போது வள்ளலாரிடம் வந்துள்ளார்.

★ சாதியும் மதமும் சமயமும் பொய்யென ஆதியில் உணர்த்தியவர் அருட்பெருஞ்சோதி இராமலிங்க வள்ளலார்.

★ "ஒத்தாரும் உயர்ந்தாரும் தாழ்ந்தாரும் எவரும் ஒருமையுள் அடங்கி உலகியல் நடத்த வேண்டும்" - என்பதே அவரது கொள்கை.

★ "சாதி மதம் சமயமெனும் சங்கடம்விட்டு அறியேன்
சாத்திரச் சோறாடுகின்ற சஞ்சலம்விட்டு அறியேன்" - எனப் பாடியவர் அவர்.

★ "சாதியும் மதமும் சமயமும் தவிர்த்தேன்
சாத்திரக் குப்பையும் தணந்தேன்" - என்று முடிவுக்கு வந்தவர் அவர்.

★ **சாதியிலே மதங்களிலே சமய நெறிகளிலே**
சாத்திரச்சந் தடிகளிலே கோத்திரச் சண்டையிலே
ஆதியிலே அபிமானத்து அலைகின்ற உலகீர்
அலைந் தலைந்து வீணேநீர் அழிதல் அழகலவே

- என்று பாடியவர் வள்ளலார் பெருமான்.

'கடவுள் ஒருவரே' என்பதும், 'அவரை உண்மை அன்பால் ஒளி வடிவில் வழிபாடு செய்ய வேண்டும்' என்றும், சாதி சமயம் முதலிய எவ்வகை வேறுபாடும் கூடாது என்பதும்; எவ்வுயிரையும் தம் உயிர் போல் எண்ணும் உள்ள நேய ஒருமைப்பாட்டைக் கைக்கொள்ள வேண்டும் என்றும், ஏழைகளின்பசிதவிர்த்தலேசீவகாருண்யஒழுக்கம்என்றும், 'புராணங்களும் சாத்திரங்களும் முடிவான உண்மையைத் தெரிவிக்க மாட்டாது' என்றும் - இவையே சமரச சன்மார்க்க நோக்கம் என்றும் கூறினார் வள்ளலார்.

அதனைப் பரப்புவதற்காக 1865 ஆம் ஆண்டு சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம் நிறுவினார். கடவுளை ஒளி வடிவில் காண சத்திய ஞான சபையை உருவாக்கினார். 'உள்ளமே திருக்கோயில்' என்றார். இத்தகைய வள்ளலாரை நால் வருணக் கும்பலோடு சேர்த்துச் சிதைக்கப் பார்க்கிறார் ஆளுநர்.

இவருக்குச் சனாதனமும் தெரியவில்லை, வள்ளலாரும் தெரியவில்லை, எல்லாம் தெரிந்தவர்போல நடிக்க மட்டும் தெரிகிறது.

சென்னை உயர்நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாக இருந்து இப்போது உச்சநீதிமன்ற நீதிபதியாக இருக்கும் சஞ்சய் கிஷன் கவுல் அவர்கள் கடந்த ஆண்டு நடந்த விழாவில் பேசும்போது, **"தமிழ்நாடு பல்வேறு சமுதாய சீர்திருத்த இயக்கங்களின் வளமான வரலாற்றை நமக்களித்து அதன் முன்னோடியாகவும் இருந்து வருகிறது. அதன் காரணமாக சமுதாய உரிமைகளைப் பாதுகாக்க ஏதுவாக இருக்கிறது. அதிகமாக நேசித்து அடுத்தவர்களுக்கு உதவ வேண்டும் என்கிற உயரிய கோட்பாட்டை வள்ளலார் மற்றும் பெரியார் அவர்களிடம் நாம் கற்றுக் கொண்டோம் என்பதை பெருமையாக எடுத்துக் கொள்கிறேன். அவர்களின் கருத்துக்களில் ஒன்றிணைந்து தோளோடு தோள் நிற்கும் பெருமை நமக்குக் கிடைத்திருக்கிறது"** என்றார்.

இத்தகைய தெளிவான படிப்பு இவருக்கு இல்லை. இத்தனைக்கும் கவுல், பண்டிட் குடும்பத்தைச் சேர்ந்தவர்தான். ஆனால் அவருக்கு வள்ளலாரையும், பெரியாரையும் தமிழ்நாட்டையும் உள்வாங்கும் தன்மை இருந்தது. இவருக்கு அதில் துளியும் இல்லை.

அமைதித் தமிழ்நாட்டை கொள்கை ரீதியாகவும் நிர்வாக ரீதியாக குழப்பும் எண்ணம் மட்டுமே இருக்கிறது. இதைவிடப் பெரிய படையெடுப்புகளைப் பார்த்தது தமிழ்நாடு. இதைவிடப் பெரிய குழப்பவாதிகளை எதிர்கொண்டு முறியடித்தது தமிழ்நாடு.

மன அழுத்தம் குறித்த மருத்துவ முகாம்!

சென்னை,ஜூன் 25- சென்னை பத்திரிகையாளர் யூனியன் (எம்.யு.ஜெ.) சார்பில் மன அழுத்தம் - இளம் வயதினர் தற்கொலை அதிகரிப்பது ஏன்? தீர்வு என்ன? என்பது குறித்து கலந்துரையாடல் கூட்டம் இன்று (25.6.2023- ஞாயிற்றுக்கிழமை) மாலை 5 மணிக்கு - சென்னை, ரிச்சி தெரு வில் உள்ள சங்க அலுவலகத்தில் நடைபெறுகின்றது.

இதில் மனநல மருத்துவர் அரவிந்தன் சிவக்குமார் கலந்து கொண்டு கலந்துரையாடுகிறார்.

நிகழ்ச்சிக்கு எம்.யூ.ஜெ. தலைவர் எல்.ஆர்.சங்கர் தலைமை வகிக்கிறார்.

கீழையூர் கிழக்கு ஒன்றியக் கழகச் செயலாளர் ஆ.தாமஸ் ஆல்வா எடிசன் இல்ல மணவிழாவை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையேற்று நடத்தி வைத்தார்.

விவசாயிகளுக்கும் - பொதுமக்களுக்கும்

காவிரி டெல்டா மாவட்டங்களில் தூர்வாரும் பணியினால் ஏற்படும் பயன்கள்!

தமிழ்நாடு அரசு விளக்கம்!

சென்னை, ஜூன் 25- காவிரி ஆறு காடு, மலை, பள்ளதாக்கு பகுதிகளில் நீண்டதூரம் கடந்து வருவதால், பாறை மற்றும் மண் திட்டுக்களில் ஏற்படும் அரிமானத்தின் காரணமாக காவிரி ஆற்று நீரில் மணல் மற்றும் சிறு துகள்கள் அதிகமாக அடித்துவரப்படுகின்றது. காவிரி ஆற்று நீரில் அதிகமான மணல் மற்றும் சேற்று படிவங்கள் கலந்து வரும்பொழுது வாய்க்கால்களின் தரைமட்ட சரிவு மிகவும் குறைவாக உள்ளதால் நீரின் வேகம் குறைந்து மண் திட்டுக்கள் ஏற்படுகிறது. நீர் வழித்தடங்களில் அதிகமான நீர்த்தாவரங்களும், செடி கொடிகளும் வளர்வதால் நீரில் கலந்து வரும் சேற்று படிவங்கள் தடைபட்டு மண்மேடுகள் உருவாகின்றன. மண்மேடுகளை தூர்வாரும் பட்சத்தில் ஒவ்வொரு வாய்கால்களின் கடை மடை பகுதி வரை நீர் தங்கு தடையின்றி சென்றடையும். மழை காலங்களில் விவசாயப் பயிர்கள் நீரில் மூழ்காமல் விரைவில் வடிகால்களில் வடிவதினால் பயிர் சேதங்களை குறைக்க முடியும், இதன் காரணமாக ஒவ்வொரு ஆண்டும் காவிரி வடிநிலப் பகுதியில் உள்ள ஆறுகள், வாய்க்கால்கள் மற்றும் கால்வாய்களில் கடைமடைவரை தண்ணீர் கொண்டு செல்ல அவற்றின் அவசியம் கருதி தூர்வாரப்பட வேண்டிய நிலை ஏற்படுகிறது.

மூன்றாண்டுகளுக்கு மேல் தூர்வாரப்படாத கால்வாய்கள், வாய்க்கால்கள், வடிகால்கள் மற்றும் ஏரிகள் ஆகியவற்றை நீர்வளத்துறையின் அலுவலர்கள் மூலமாக கண்டறிந்தும், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தனிப்பிரிவிலிருந்தும், அமைச்சர்களிடமிருந்தும், மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெறும் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்திலிருந்தும், மக்கள் பிரதிநிதிகளான நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்களிடம் இருந்தும் பெறப்படுகின்ற மனுக்கள் அனைத்தையும் நீர்வளத்துறை அலுவலர்கள் நேரடியாக தளஆய்வு செய்து பரிசீலனை செய்யப்படுவதன் அடிப்படையில் பணிகள் தேர்வு செய்யப்படுகிறது.

2023-24-ஆம் ஆண்டு காவிரி டெல்டா பாசனப் பகுதிகளை தூர்வார 17.04.2023 அன்று 691 பணிகள் 4773.13 கி.மீ நீளத்திற்கு ரூ.90.00 கோடி மதிப்பீட்டிற்கு ஒப்புதல் வழங்கப்பட்டது. அதன்படி திருச்சி மண்டலத்திற்குட்பட்ட ஆறுகள், கால்வாய்கள், வாய்கால்கள், வழங்கு வாய்க்கால்கள் மற்றும் வடிகால்களை தூர்வார சேலம் மாவட்டத்தில் 2 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 31 பணிகளும், நாமக்கல் மாவட்டத்தில் 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 5 பணிகளும், திருச்சி மாவட்டத்தில் 15.88 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 100 பணிகளும், கரூர் மாவட்டத்தில் 6.48 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 38 பணிகளும், அரியலூர் மாவட்டத்தில் 3.13 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 13 பணிகளும், பெரம்பலூர் மாவட்டத்தில் 4 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 39 பணிகளும், தஞ்சாவூர் மாவட்டத்தில் 20.45 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 189 பணிகளும், திருவாரூர் மாவட்டத்தில் 12.83 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 111 பணிகளும், நாகப்பட்டினம் மாவட்டத்தில் 3.98 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 28 பணிகளும், மயிலாடுதுறை மாவட்டத்தில் 8.06 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 51 பணிகளும், புதுக்கோட்டை மாவட்டத்தில் 2.69 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 31 பணிகளும் மற்றும்சென்னை மண்டலத்திற்குட்பட்ட கடலூர் மாவட்டத்தில் 55 பணிகள் 768.30 கி.மீ நீளத்திற்கு ரூ.10.00 கோடி மதிப்பீட்டில் எடுத்து கொள்ளப்பட்டன.இதனால் காவிரிக் கடைமடை பகுதிகள் அனைத்து இடங்களுக்கும் தண்ணீர் தடை இல்லாமல் சென்றுக்கொண்டுள்ளது.

நீர்வளத்துறை அமைச்சர் அவர்கள் 27.04.2023 அன்று தூர்வாரும் பணிகளை துவக்கி வைத்தார்.

தூர்வாரும் பணிகள் நடைபெறும் இடங்களில் பணியின் பெயர், பணியின் மதிப்பு, ஒப்பந்தக்காரர் பெயர், உதவிப்பொறியாளர் / உதவிசெயற்பொறியாளர் / ஒருங்கிணைப்பு அலுவலர் பெயர். பணி துவங்கிய நாள் மற்றும் பணி முடிக்க உத்தேசிக்கப்பட்ட நாள் ஆகிய விவரங்கள் அடங்கிய விளம்பரப் பலகைகள் வைக்கப்பட்டுள்ளன.

தூர்வாரும் பணிகளை கண்காணிக்க மாவட்டத்திற்கு ஒரு இந்திய குடிமையியல் பணியை சார்ந்த அதிகாரிகள் நியமிக்கப்பட்டு, அவர்களது மேற்பார்வையில் பணிகள் நடைபெற்றன. ஆறுகள்/ கால்வாய்கள்/ வாய்க்கால்கள்/ வடிகால்கள்/ ஏரிகள் பாசன பரப்பிலுள்ள விவசாயிகள், பஞ்சாயத்து அலுவலர், நீர்வளத்துறை பிரிவு அலுவலர் உள்ளடக்கிய உழவர்குழு, உதவி வேளாண் அலுவலர்கள் தலைமையின் கீழ் அமைக்கப்பட்டு தூர்வாரும் பணிகள் கண்காணிக்கப்பட்டன. தூர்வாரும் பணிகளில் ஒரு நாளில் அதிக பட்சமாக 836 இயந்திரங்கள் ஈடுபடுத்தப்பட்டு பணிகள் நடைபெற்றன. தூர்வாரும் பணிகளின் தினசரி முன்னேற்றத்தைப் பதிவேற்ற களப்பொறியாளர்களுக்கான மொபைல் செயலி உருவாக்கப்பட்டு பணிகள் கண்காணிக்கப்பட்டன.

பணிகளை முதல்வர் ஆய்வு!

மேலும், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் காவிரி டெல்டா மாவட்டங்களில் நடைபெற்ற தூர்வாரும் பணிகளை 09062023 அன்று பார்வையிட்டார்.

தூர்வாரும் பணிகளை தினந்தோறும் ஆய்வு மேற்கொண்டு தினசரி முன்னேற்ற அறிக்கைகளை அன்றைய தினமே கூடுதல் தலைமை செயலாளர் நீர்வளத்துறை அவர்களுக்கு மின்னஞ்சல் வழியாக அனுப்பிவைக்கப்பட்டது.

உரிய காலத்தில் மேட்டூர் அணை திறக்கப்பட்டதாலும் தூர்வாரும் பணிகள் குறித்த காலத்தில் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டதாலும் தண்ணீர் கடைமடை வரை விரைந்து சென்றடைவதாலும் விவசாயிகள் விவசாயப் பணிகளை துரிதமாக மேற்கொள்ள இயலும். பருவமழை காலத்தில் வடிகால்களில் தூர்வாரும் பணி மேற்கொள்ளப்பட்டதால் வெள்ள நீர் விரைவாக வடிந்து பயிர்களுக்கு எவ்வித சேதமும் ஏற்படாமல் பாதுகாக்கப்படும்.

சம்பா பயிர்கள் நீரில் மூழ்காமல் காப்பாற்றப்படும்!

இதனால், காவிரி டெல்டா மாவட்டங்களில் சம்பா சாகுபடிக்கான முன்னேற்பாடுகளும் முன்கூட்டியே துவக்கப்படுவதால் வடகிழக்குப் பருவமழை காலத்தில் சம்பா பயிர்கள் வெள்ள நீரில் மூழ்காமல் பாதுகாக்கப்படும். மேலும் நிலத்தடி நீர் மட்டம் உயர்வதால், கோடை பயிர் வகைகளையும் அதிக அளவில் சாகுபடி செய்வதற்கான வாய்ப்பும் ஏற்படும். இன்றைய தேதியில் ஒரு இலட்சத்து 56 ஆயிரத்து 352 ஏக்கர் அளவில் குறுவை சாகுபடியில் நெல் பயிரிடப்பட்டு வருகிறது.

இவ்வாறு தமிழ்நாடு அரசு விளக்கமளித்துள்ளது.

கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி கோரிக்கையை ஏற்று

பாலக்காடு, ராமேஸ்வரம், திருநெல்வேலி உள்ளிட்ட 3 அதிவேக ரயில்கள் ராசிபுரத்தில் நின்று செல்லும்!

தென்னக இரயில்வே அறிவிப்பு!

நாமக்கல், ஜூன் 25- நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் கோரிக்கையை ஏற்று ராசிபுரம் இரயில்வே நிலையத்தின் மார்க்கமாகச் செல்லும் இரயில்கள் ராசிபுரத்தில் நின்று செல்லும் என தென்னக இரயில்வே அறிவித்துள்ளது.

நாமக்கல் மாவட்டத்தில் அமைந்துள்ள சுற்றுலாத் தலங்களில் ஒன்றான கொல்லிமலைக்குச் செல்வதற்கான முக்கிய சந்திப்பு இராசிபுரம் இரயில்வே நிலைய மாகும். இதை தவிர இராசிபுரம் பட்டு, சாஹோ மற்றும் கோழிப்பண்ணை போன்ற பல்வேறு வணிகங்களுக்கான முக்கிய மையமாகவும் இந்நிலையம் உள்ளது. இங்கு தற்பொழுது மிக குறைவான இரயில்களே நிறுத்தப்படு கின்றன. இராசிபுரம் இரயில்வே நிலையத்தில் கோவிட் 19 பெரும் தொற்றிற்கு முன் நிறுத்தப்பட்ட இரயில்கள் அதன் பின்பும் நிறுத்தப்படவில்லை. மேலும் அருகில் உள்ள இரயில்வே நிலையங்களுக்குச் செல்ல வேண்டி உள்ளதால், மக்கள் பெரிதும் சிரமப்பட்டு வருகிறார்கள்.

எனவே, ராசிபுரம் மக்களின் நீண்ட நாள் கோரிக்கைகளை ஏற்றும், மக்களின் முன்னேற்றத்திற்காகவும் 22651சென்னை - பழனி விரைவு இரயில், 17236 நாகர்கோவில் - பெங்களூர் விரைவு இரயில், 16339/16340நாகர்கோவில் - மும்பை விரைவு இரயில், 11021/11022 - தாதர் - திருநெல்வேலி விரைவு இரயில் ஆகிய இரயில்கள் ராசிபுரம் இரயில்வே நிலையத்தில் நின்று செல்வதற்கு நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் கடந்த 15.06.2023 அன்று ரயில்வே துறை அமைச்சர் மற்றும் ரயில்வே வாரிய தலைவர் அனில்குமார் லகாடியைச் சந்தித்து கோரிக்கை விடுத்திருந்தார்.

இதையடுத்து, கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி கொடுத்த கோரிக்கையை ஏற்று தற்போது, வண்டி எண் : 16733/16734 ராமேஸ்வரம் - யோகா ராமேஸ்வரம் விரைவு வாரந்திர இரயில் இராசிபுரம் வழித்தடத்தில் வாரம் ஒருமுறை காலை 11.58 மணிக்கு நின்று செல்லும் எனவும் சனிக்கிழமை காலை திருப்பதி செல்வதற்கு காலை 5.50 மணிக்கு நின்று செல்லும் எனவும்,

அதேபோல் வண்டி எண் : 22651 சென்னை - பாலக்காடு எக்ஸ்பிரஸ் இரயில் பழனி வழியாக இராசிபுரத்தில் காலை 3.27 மணிக்கும், வண்டி எண் : 17236 நாகர்கோயில் - பெங்களூர் செல்லும் இரயில் காலை 3.31 மணிக்கு இராசிபுரத்தில் நின்று செல்லும் என தென்னக இரயில்வே அறிவித்துள்ளது. இந்த அறிவிப்பால் ராசிபுரம் பகுதி பட்டு, சாஹோ மற்றும் கோழிப்பண்ணையாளர்கள், வர்த்தகர்கள், பொது மக்கள் என அனைவரும் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

மீன்வளம் – மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர் பாபு ஆகியோர் நேற்று முன்தினம் (23.06.2023) திருச்செந்தூர், சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலுக்கு வரபெற்ற பலமாற்று பொன் இனங்களில் பயன்படாத பொன் இனங்களை உருக்கி சுத்த தங்கக் கட்டிகளாக மாற்றி தங்க முதலீட்டு பத்திரத்தில் முதலீடு செய்யும் வகையில் 211 கிலோ எடையுள்ள பிரித்தெடுக்கப்பட்ட பலமாற்று பொன் இனங்களை உயர்நீதிமன்ற நீதியரசர் (ஓய்வு) செல்வி ஆர்.மாலா முன்னிலையில் பாரத ஸ்டேட் வங்கி பொது மேலாளர் கோவிந்த் நாராயண் கோயலிடம் ஒப்படைத்தனர். உடன் இந்து சமய அறநிலையத்துறை சிறப்பு பணி அலுவலர் ஜெ. குமரகுருபரன், ஆணையர் க.வீ முரளீதரன், மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.கி.செந்தில் ராஜ், திருக்கோயில் அறங்காவலர் குழுத்தலைவர் இரா.அருள் முருகன் மற்றும் அலுவலர்கள் உள்ளனர்.